# தாயகம்

பயணம்: 02 ஆடி – புரட்டாதி 1994 பாதை: 08


மா நகராட்சி மன்று
22-10-1994
யாழ்ப்பாணம்



மக்கள் பதிப்பு

ரூபா: 5/-

For all your Optical Requirements
just step into



# S.M. FERNANDO

'OPTICIANS'

580, HOSPITAL ROAD, JAFFNA.
(Near Bank of Ceylon)

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
22-10-1994
யாழ்ப்பாணம்

# இதயத்திலிருந்து...

பயணம்: 02 ஆடி - புரட்டாதி பாதை : 08

இன்றைய இளம்சமுதாயம் எதையோ தொலைத்து விட்ட பிரமையில் ஊசலாடுகிறது. அவர்களுக்கு மகிழ்ச்சி இது என்று தெரியாது. ஏனோ தானோ என்று வாழ்பவர்கள் பலர் ஏக்கப் பெருமூச்சுக்களையே சுவாசமாக்கி கொண்டு விட்டனர்.

சிலர் காதலையும், பாலுணர்வையும் தங்கள் பசி என்று உணவு தேடுகின்றனர். அவர்களின் உணர்வுகள் உதாசீனம் செய்யக் கூடியதல்ல ஆனாலும்

நாம் இங்கே ஒரு ஆரோக்கியமான சமுகத்தைக் கட்டி யெழுப்ப வேண்டிய நிலையில் உள்ளோம். இவர்களுடைய, "எதையோ தொலைத்து விட்ட" என்ற பிரமை தேடலாக மாற வேண்டும்.

ஏக்கப் பெருமூச்சு அனல் வீச்சுகளாக மாற வேண்டும்.

இவர்களுடைய இளமை உணர்வுகள் சிந்தனைகளாக மாற வேண்டும்.

வெகு விரைவில் .....

— ஆசிரியர்.

ஆசிரியர்:

யாதுமூரான்

ஆசிரியர் குழு:

அக்கரைச் சக்தி
மல்லிகை மைந்தன்
உரும்பையூர் முரளி
நிலா மகன்
சமுத்திர பந்தன்

அட்டைப்பட ஓவியர்:

மாற்கு

விநியோகம்:

பூபாலசிங்கம்புத்தகசாலை
வீ. எம் சுப்பிரமணியம்

பக்கங்கள்: 48

அடுத்த இதழ்:
ஆண்டு மலர்
1994 கார்த்திகை.

வாசகர்களே!

மாற்றம் காலாண்டு மக்கள் சஞ்சிகை பற்றிய உங்களுடைய கருத்துக்களையும் ஆக்கங்களையும் எதிர் பார்க்கிறோம்.

ஆ - ர்

## அகத்தே


5 - 9 வாய்ப்பும் வசதியும்

தனிமனித வாழ்விலோ. சமூக வாழ்விலோ ஒரு மாற்றத்தை அல்லது திருப்பத்தை வாய்ப்பும் வசதியும் தரும் என்கிறார் கட்டுரையாசிரியர்.

11 ஓ...... இனிய குயில்களே!
-சிலந்தியின் கவிதை

13 – 17
"காலத்தை வென்றவன்"
- அவனுமல்ல அதுவும் தான்." எது?
சிறுகதையைப் படியுங்கள்.

19 - 24 "கல்வியும் காசும்"
பணம் பாதாளம் மட்டும் பாயும். ஆனால் கல்வி . கட்டுரையைப் படியுங்கள்.

28 30 தொய்வு
ஆஸ்மா எனப்படும் இந்நோய் எப்படி வருகிறது. பிரதீபன் விடை எழுதுகிறார்.


***


முகவரி:-

மாற்றம் பணிமனை
சட்டநாதர் வீதி,
நல்லூர்.

# இனித்திட "மாற்றம்" வாழி……

போற்றுதற் குரிய தொண்டு
பூந்தமிழ் ஏடு நன்று
சாற்றிடும் 'மாற்றம்' என்ற
சரித்திரம் படைக்கும் ஏடு
ஆற்றுநீர் போல எங்கள்
அருந்தமிழ் நடையின் ஓட்டம்
நாற்று நற்பயிர் விளைந்து
நந்தமிழ் 'மாற்றம்' வாழி!

தேசிய உணர்வு பொங்கும்
தீந்தமிழ்ச் சுவை குலுங்கும்
மாசிலாப் பண்பு யாவும்
மாந்திட 'மாற்றம்' நல்கும்
காசினி ஈழ நல்லூர்
கவின் தமிழ்த்தாய் மன்றத்தார்
ஆசியாய் வந்தே அன்னை
அழகுறு 'மாற்றம்' பெற்றாள்.

செந்தமிழ் ஏடாம் 'மாற்றம்'
செகத்தினில் புதுமை செய்யும்
அந்தமில் அழகுப் பாவை
அருந்தமிழ் இனிமை சொட்டும்
நந்தமிழ் வீரம் காட்டும்
நயந்திடும் அன்பு கூட்டும்
இந்த நல்லுலகம் தன்னில்
இனித்திட 'மாற்றம்' வாழி…

சுபம்

இயலிசை வாரிதி
யாழ்ப்பாணம்
**பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்**

உடன் பிறந்தார்களைப் போலே - இங்கு
உலகில் மனிதரெல் லாரும்;
திடங்கொண்டவர் மெலிந்தோரை - இங்கு
தின்று பிழைத்திட லாமோ?

வாழ்த்துவோர்:

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**

**52, மணிக்கூட்டுக் கோபுர வீதி,**

**யாழ்ப்பாணம்.**



# "வாய்ப்பும் வசதியும்"

அக்கரைச் சக்தி

*"வாய்ப்புக் கிடைக்கும் சிலருக்கு வசதி கிடைப்பதில்லை. இதனால் அருமையான வாய்ப்புகளை தெரிந்தோ, தெரியாமலோ தவற விடடுத் தவிப்பவர் பலர். சிலருக்கு நிறைய வசதிகள் இருக்கும். இருந்தும்வாய்ப்புகளைப் பற்றித் தெளிவாக அறிவு இல்லாததன் காரணமாக அவற்றைத் தவற விடுகின்றனர்."*

ஒரு செயலை நாம் நிறைவேற்ற ஏற்படும் சந்தர்ப்பமே, வாய்ப்பு ஆகும். அச்செயலின் நிறைவேற்றத்திற்கான அனுகூலங்களே வசதிகள் எனப்படும். வாய்ப்பும் வசதியும் சிலவேளை தானாகவே உருவாகும். பல சந்தர்ப்பங்களில் நாமே அவற்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியும் நேரிடும். எது எப்படியிருந்த போதும் வாய்ப்பையும் வசதியையும் சரியான முறையில் பயன்படுத்துவது- அதனால் ஏற்படும் நன்மைகளை அனுபவிப்பது - முற்றிலும் எம் கைகளிலேயே தங்கியுள்ளது எனலாம். வாய்ப்பும் வசதியும் கிடைத்து விட்டால் தானாகவே செயல் நடைபெறாது. அதற்கு எமது முயற்சி அவசியம். வாய்ப்பையும் வசதியையும் தவறான வகையில் பயன் படுத்துபவர்களும் இல்லாமலில்லை. ஆனால் அதன் விளைவுகள் அவர்களை மட்டுமல்ல

எவர்களையெல்லாம் பாதிக்கப் போகின்றது என்பதை கூறிவிட முடியாது. எப்போது, எப்படிப் பாதிக்கப்போகிறது என்பதையும் சொல்ல முடியாது. ஆனால் என்றோ ஒருவேளை அல்லது நீண்ட காலத்திற்காகவாவது பாதிப்பு ஏற்படும் என்பது மட்டும் நிச்சயமானது.

தனிவாழ்விலோ, சமூக வாழ்விலோ ஒரு மாற்றத்தை அல்லது திருப்பத்தை வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தி விடக்கூடியது. வாய்ப்புக் கிடைக்கும் சிலருக்கு வசதி கிடைப்பதில்லை. இதனால் அருமையான வாய்ப்புகளைத் தெரிந்தோ தெரியாமலோ தவற விட்டுத் தவிப்பவர் பலர். சிலருக்கு நிறைய வசதிகள் இருக்கும். இருந்தும் வாய்ப்புக்களைப் பற்றித் தெளிவான அறிவு இல்லாததன் காரணமாக அவற்றைத் தவறவிட்டுவிடுகின்றனர். சிலர் சரியான வாய்ப்புக்கள் கிடைக்கும் வரை பொறுமையாக இருந்து தங்கள் காரியங்களைச் சாதித்து பெரும் முன்னேற்றத்தை அடைந்து விடுகின்றனர். இவர்களே வெற்றியாளர்களாக விளங்கி விடுவதும் உண்டு. வாழ்வில் வரும் வாய்ப்புகள் பற்றிய விளக்கம் உள்ளவர்களின் விடாமுயற்சியானது அவர்களுக்குப் பக்கபலமாக வசதிகளை ஏற்படுத்தும் என்பது அனுபவ உண்மையாகும்.

மனிதனின் வளர்ச்சிப் படிகளில் இயற்கையாகவே அவனது முன்னேற்றத்திற்கான, வாய்ப்புகளுக்கான காலம் அமைந்துள்ளது. இது பெரும் பாலும் உடல் ரீதியான அம்சங்களிலேயே தங்கியுள்ளது. இதற்கடுத்ததாகவே மனரீதியான அம்சங்கள் வருகின்றன. மனிதன் தனது ஆரம்பக்கல்வி, நடத்தை, ஒழுக்கம் என்பனவற்றைச் சிறிய வயதிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும். அந்தவயதே அவனுக்கு வாய்ப்பான காலமாகும். கிடைக்கும் வசதிகளைப் பொறுத்தும் அவனது முயற்சியைப் பொறுத்தும் முன்னேற்றம் நிர்ணயிக்கப்படும். தன் ஜீவனோபாயத்திற்கான தொழில்வாய்ப்பைப் பெறுதல் இந்த முன்னேற்ற அளவுகோலிலே தங்கியுள்ளது. வாலிப வயதே அவன் திருமணம் செய்து குடும்பம் நடத்தவாய்ப்பானது. திருமண வாழ்வு அல்லது இல்லற வாழ்வுக்கு மனிதனின் இனவிருத்தி உறுப்புகளின் சரியான தொழிற்பாடுகள் அவசியமானதால் அவ்வுறுப்புகள் செயற்படக்கூடிய காலமே வாய்ப்பான காலமாகும். இனவிருத்தி உறுப்புகளின் செயல்கள் ஓய்ந்த போதும் திருமணம் செய்யலாம். ஆனால் இனப்பெருக்கம் செய்யமுடியாது. இது இயற்கை இட்ட சட்டம். மனிதவாழ்வின் அதி முக்கிய கட்டமான இந்த வாலிபப்பருவ வாய்ப்பைத் தங்கள் பிழையான அணுகுமுறையாலும் தெளிவின்மை

யாலும், சுற்றுப்புறச் சூழலின் தவறான வழிநடத்தலாலும் தவற விட்டுவிட்டு, காலங்கடந்த நிலையில் ஏங்கித் தவிப்பவர் பலர். எப்படித்தவித்தாலும் தவறவிட்டது விட்டதுதான். அதை மீண்டும் சீர் செய்ய முடியாது. காரணம் உடலின் இயற்கையான வளர்ச்சிப்படியில் உள்ள இந்தக்கட்டம் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்கு உட்பட்டதாகும். வாழத்தெரியாதவனே இதைத்தவறவிடுகிறான். மனிதனின் இளமைடபருவ அனுபவங்களும், வாலிபப்பருவ அனுபவங்களும் சேர்ந்தே முதுமைப் பருவ வாழ்க்கையை அமைக்கின்றன. எனவே முதலிரு பருவங்களிலும் வரும் வாய்ப்புகளையும் வசதிகளையும் திறமையாகப் பயன்படுத்தி வருபவனுக்கு முதுமைக் காலம் அவ்வளவு பிரச்சனையுள்ளயாய் இருக்கமாட்டாது,

பெண் ஒருத்தி அழகாக இருந்துவிட்டால் அவளுக்கு எப்போதும் திருமணச் சந்தையில் வாய்ப்புகள் அதிகம். அவரின் குடும்பத்தினரின் பொருளாதார நிலைமையும், அந்தஸ்தும் வசதியாய் அமைந்துவிட்டால் அப்பெண்ணுக்கு நல்ல வரவேற்பு இருக்கும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. இதே போல் ஒரு ஆணுக்கு அவருடைய தொழில்காரணமாக சமூக அந்தஸ்து முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இவ்வாய்ப்புகளும் வசதிகளுமில்லாதவர்கள் திருமணவாழ்வில் இணைந்து கொள்வதில் ஏகப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குவதை நாம் சர்வசாதாரணமாகக் காணலாம்.

இயற்கையினுடைய செயல்களை உற்று நோக்கினால் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நடைபெறுவதை அவதானிக்கலாம். காலததிற்கும் நிகழ்ச்சிக்கும் தொடர்புகள் உண்டு என்பதை நவீன விஞ்ஞான மேதையான பேராசிரியர் ஐன்ஸ்டீனும் தன் சார்வியற் கோட்பாட்டில் தெளிவுபடுத்தியுள்ளார். காலத்திற்கும நிகழ்ச்சிக்குமான தொடர்புகளை நம் பாரம்பரிய சோதிட சாஸ்திரமும் எடுத்துக்கூறியிருக்கிறது. ஒருவனுடைய வாழ்க்கையிலும் வாய்ப்புக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் வருகிறது. என்று அறுதியிட்டு கூறுகிறது சோதிட சாஸ்திரம். சரியானபடி கணிப்புக்களை மேற்கொண்ட சோதிட சாஸ்திர மூலம் காலத்தை அறிந்து அக்காலத்தில் ஏற்படத்தக்க வாய்ப்புக்களை உணர்ந்து செயலில் இறங்கினால் இயறகை உம்மோடு ஒத்துழைத்து வசதிகளை ஏற்படுததித்தரும் - அதனால் எமது முன்னேற்றமும் இலகுவாக வந்துவிடும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் சோதிட சாஸ்திரத்தைத் திறமையாகக் கையாளக் கூடியவர்கள் அருகிவிட்ட காரணத்தால் மக்களுக்கு நம்பிக்கை குன்றிவிட்டது. அதனால் திசைகாட்டி இல்லாத கப்பல் சுழியில் அகப்பட்டதுபோல

வாய்ப்புகள் எது, வசதிகள் என்ன தேவை என அறிய முடியாமல் மக்கள் திணறிக் கொண்டு அலைகிறார்கள்.

பொது மக்களிடம் சாதாரணமாகக் காணப்படும் மத உணர்ச்சி, கலையுணர்ச்சி, மொழியுணர்ச்சி, இனஉணர்ச்சி என்பவற்றைப் பிழையான வழிகளில் தூண்டிவிட்டு அதனாற் கிடைக்கும் ஆதரவு காரணமாகச் சிலருக்கு அரசியல் வாதிகளாக மாற வாய்ப்புகள் கிடைக்கின்றன வசதிகளும் குவிக்கின்றன. திடீர் பணக்காரர்களாகி, தலை கால் தெரியாமல் ஆடுபவர்கள் இதற்கு நல்ல உதாரணமாக தமிழ்நாடு இருந்து வருகிறது. அங்கு சினிமா நடிகர்கள் அரசியல் வாதிகளாய் மட்டுமல்ல முதலமைச்சர்கள் ஆகின்றனர். கல்விமான்களே அவர்கள் காலில் விழுந்து வணங்குமளவுக்கு அந்த அரசியல் வாதிகளின் அடாவடித்தனம் உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களைத் தாழ்த்தப்பட்ட மக்களாகவே வைத்துக்கொண்டே தங்கள் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர். சினிமா மோகத்தின் அபரிமிதமான செல்வாக்கு காரணமாக சினிமாக்காரர்களுக்கு கோடிகோடியாய் பணம் சேர்க்கும் வாய்ப்பும் வசதிகளும் தமிழ்நாட்டில் உண்டு. இதே போன்று இலங்கையின் மலையகத்தில் உள்ள தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தையோ, கல்வித் தரத்தையோ கொஞ்சம் கூட முன்னேற்ற எண்ணம் கொள்ளாது அவர்களை இருநூறு முந்நூறு வருடமாக அடிமைப் படுத்திக் கசக்கிப் பிழிந்து இரத்தம் குடித்து வந்த முதலாளி வர்க்கம் இந்த நவீன நாகரிக யுகத்திலும் கூட மலையக மக்களுக்கு (லயன்) வாழ்க்கையையே வாழக் கூடியதாகத் தங்கள் தந்திரங்களை நிறைவேற்றி வருகின்றன. மலையக மக்கள் இன்னும் ஏமாளிகளாகவே இருப்பதால் அவர்களின் ''ரட்சகர்கள்'' என அவதாரம் எடுத்திருக்கும் ஈனப்பிறவிகளின் சூழ்ச்சிகளுக்குப் பலிக்கடாவாக ஆகிவருகின்றனர். ''தொழிலாளர் திலகங்களாக'' வாழும் அரசியல் கோமாளிகள் நல்ல வாய்ப்பும் வசதியும் பெற்றுத் தங்கள் ஆதிக்கத்தை மட்டுமல்ல, தங்கள் குடும்ப வாரிசுகளையும் உருவாக்கி விட்டனர் என்பது மிகவும் கவலைக்குரிய விடையமாகும்.

இன்றைய சூழ்நிலையை ஒரு பெரும் வாய்ப்பாகக் கொண்டு, பொருளாதாரத் தடை காரணமாகத் திடீர் பணக்காரராகி என்றுமில்லா வசதிகளுடன் வாழும் பலரைப் பற்றி அனைவரும் அறிவோம். இன்றைய சூழ்நிலை வெளிநாடுகளில் இருந்து உதவி பெறும் ஸ்ரீலங்கா அரசியல் வாதிகளுக்கும், உள்ளூர் முதலாளிகளுக்கும் என்றுமில்லாத வாய்ப்பையும் வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. தடை விதிக்கப்பட்ட பொருட்களை இங்கு ''எவ்வாறோ'' கொண்டு சேர்க்கும் வியாபாரிகள்

தடை முகாம் இராணுவத்தினருக்கு கைக்குள் வைக்கும் ''பயணத்தினால்'' அந்த இராணுவத்தினர் பெரும் பயணக்காரர்களாகி வருவதாகவும் வாய்ப்புகளும் வசதிகளும் பெற்று வாழ்ந்துவருவதாகவும் ஸ்ரீலங்கா அரசியல் வாதிகளே அடிக்கடி ''குளறுவதுண்டு'' இதில் உண்மை இல்லாமலில்லை.

இன்றைய சூழல் இவ்வாறு பலருக்கு ஒருபக்கம் கோடீஸ்வர யோகத்தை அளித்து வந்தாலும், நாட்டுப்பற்றுள்ள - இனப்பற்றுள்ள, தியாக உணர்ச்சியுள்ள தமிழ் மா நில சிந்தனையாளர்களுக்கு மறுபக்கமாக வேறொரு விதமான வாய்ப்பை நல்கியுள்ளது. கடுமையான பிரச்சனையான இந்தச்சூழல் மக்களுக்குப் பல ''தேவை'' களை ஏற்படுத்தியுள்ளமையை உணர்ந்த இந்தச் சிந்தனைச் செல்வர்கள் இத்தேவைகளை ஓரளவாகுதல் நிவர்த்தி செய்ய புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தி வருகின்றனர். இன்றைய சூழலே புதிய சிந்தனைகளுக்குரிய வாய்ப்பைத் தந்துள்ளது. வசதிகள் குறைவாக உள்ள இந்தக் காலகட்டத்திலும் சிந்தனை ஏற்படுத்தியுள்ள புரட்சிகரமான மாற்றங்கள் தமிழர் சமுதாயத்தில் இழையோடி வருகின்றன. ஆண், பெண் என்ற வேறுபாடின்றிச் சமத்துவமான நிலையிலும், இங்குள்ள கட்டுப்பாடுகளையும் சட்டத்தையும் மதித்துக் கௌரவித்தும் இலக்கினை அடையும் வழியில் தடங்கல் ஏற்படாமல் இருக்கும்படி செய்வதற்கு இங்குள்ள அனைவருமே சிந்தனையாளர்களாக மாறிச் செயலில் இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ''நீதியான ஒரு போராட்டம் தானே திறந்து வைத்திருக்கும் சொர்க்கம்'' என்று ஸ்ரீமத் பகவத் கீதை எனப்படும் ஞான நூல் கூறுகிறது. ஆகவே இந்தத் திறந்த சொர்க்கத்தை அடைவதற்கு வாய்ப்பான சிந்தனைப் புரட்சியும் செயற்திறனும் ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியம்.

இதற்காகவே இங்கு தோன்றியுள்ள போர் வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டுமே தவிர வீண் ஆடம்பர அலங்காரங்களில் காலத்தையும், நேரத்தையும், பணத்தையும் விரயம் செய்யக் கூடாது. வசதிகளை நாமே ஏற்படுத்துவது எப்படி? இதுவே சிந்தனையின் அடிநாதமாக இருக்க வேண்டும். யாரும் எமக்கு வசதிகளை ஏற்படுத்துவார்கள் என்று நாம் வாழா இருப்பது மடமையாகும். நம்மை நாமே ஆளும் வாய்ப்பு விரைவில் வர வேண்டுமானால் தற்போதுள்ள அரிய வாய்ப்பான சூழ்நிலையைத் தவறவிட்டு விடக்கூடாது. ஒருகாலத்தில் உலகத்திற்கோ நாகரிகம் கற்றுத்தந்த தமிழினம் மீண்டும் அந்தக்காலத்தை இங்கு உருவாக்கப் பாடுபட வேண்டும் என்பதே இயற்கையின் வேண்டுதலாகும். ★



# சுவையான புதினங்கள்

● புதிதாகத் திருமணமான ஜோடி ஒன்று தேனிலவுக்காக ஊட்டிக்குப் புறப்பட்டது. ரயில்வே ஸ்ரேசனில் ரிக்கெட் கவுண்டரில் கணவன் ஞாபக மறதியாக "ஊட்டிக்கு ஒரு ரிக்கெட்'' என்று கேட்டுவிட்டான். பக்கத்திலிருந்த மனைவிக்கு ஒரே கோபம். தன்னை மறந்துவிட்டு அவருக்கு மட்டும் ரிக்கெட் வாங்குகிறாரே என்று முகம் கோணினாள். கணவன் புத்திசாலி. சட்டென்று சமாளித்துக் கொண்டான். ''அடடே! உன்னையே நினைத்துக்கொண்டிருக்கிற சந்தோஷத்தில் என்னை மறந்து விட்டேன். பார்!'' என்று என்று சிரித்தான் அவன்.

● 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை 3-12-1961 அன்று 678 பக்கங்களில் ஞாயிறு மலர் வெளியிட்டது. அதன் எடை 6 பவுண்ட். சுமார் 15 இலட்சம் பிரதிகள் அச்சாவதற்குத் தேவைப்பட்ட காகிதம் 4,500 டன். இந்தக் காகிதத்திற்குத் தேவைப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 77.000. இந்த மரங்கள் வெட்டப்பட்டதால் காலியான காட்டுப் பகுதியின் பரப்பு 360 ஏக்கர்.

● அவுஸ்ரேலியாவில் உள்ள காடுகளில் ஓணான் போன்று ஒரு பிராணி இருக்கிறது. அதன் பெயர் 'டுவாரா' அதற்கு நெற்றியில் கண் இருக்கிறது.

● மேல்நாடுகளில் திருமணத்தின் பொழுது மோதிரம் மாற்றிக் கொள்வது ஏன் தெரியுமா? மோதிரம் வட்ட வடிவமானது. அதற்கு முதலோ முடிவோ கிடையாது. தங்கள் அன்பும் காதலும் அப்படியே நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றுதான்.

● ஒரு டன் நிறையுள்ள தங்கத்தைப் பூமியின் மையப்பகுதிக்கு எடுத்துச் சென்று அதை அங்கு நிறுத்துப்பார்த்தால் கனமேயிராதாம்.

● மிருகங்களில் மிகவும் வேகமாக ஓடக்கூடியது சிறுத்தையாகும். மணிக்கு 112 கிலோ மீற்றர் ஓடும். ஆனால் கொஞ்சத்தூரம் ஓடியதும் அது களைத்துவிடும்.

● அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசிதபுத்தி, சகிப்புத்தன்மை ஆகிய ஐந்து குணங்களும் ஒரு குடும்பப் பெண்ணிடம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் திருமணத்தின் போது ஐந்து முகமுள்ள குத்து விளக்கைக் கொடுக்கிறார்கள்.




# ஓ... இனிய குயிலே!

● இலந்தி

நீங்கள் சுதந்திரமாய் சிறகடித்து
துயரங்களை மறந்திருந்து
இனிய குரலினிலே.
இன்ப நாதம் மீட்டும் போது,
சோகங்களை களைந்துவிட்டு - உங்கள்
தோழனாக நாம் வரவோ..?

மனிதனாகப் பிறந்திருந்தும் - நாம்
மனக்கதவை அடைத்து விட்டோம்.
துன்பங்களை துயரங்களை
நாமாக தொடுத்து நின்றோம்!
நேசமாக கூவுகின்ற,
குயிலோசை கேட்ட பின்பு
பாசமுடன் நாமுந்தன்
பக்கத்தில் வரலாமோ?

சிந்திக்கத் தெரிந்திருந்தும் - நாம்
சிரிப்பதுவோ சில நேரம்!
அமைதிகாக்கத் தெரிந்திருந்தும் - நாம்
அழுவதுவோ பல காலம்!
உங்களைப் போல் பிறந்திருந்தால்
உள்ளத்தில் கவலையில்லை
உயர்விருந்தும் எம்மிடத்தில்
உண்மையான அமைதியில்லை!
ஊமைகளாய் நாமிங்கு
இத்தனை நாள் உறங்கிவிட்டோம்
உனதமாய் சுதந்திரத்தை
எப்போது அனுபவிப்போம்?

# மன

நாங்கள் எண்ணக்கூடிய ஒவ்வொரு எண்ணமும் இந்தப் பேரண்டம் (Galany) முழுவதையும் ஒரு குறிப்பிட்ட அதிர்வுக்கு (Oscilla tion) உள்ளாக்குகிறது. அதிர்வு ஏற்படும் போது கண்டிப்பாக ஒரு அலை (Wave) ஏற்படும். இதை இன்று பௌதீகம் சக்தி வெளிக் களம் (Energy field) என்று குறிப்பிடுகிறது. நம் உடம்பு கோடிக் கணக்கான அணுக்களால் ஆனது. ஒவ்வொரு அணுவும் ஒரு குறிப்பிட்ட அளவில் அதிர்கிறது. இப்படியே அனைத்துக் கிரகங்களும், உபகிரகங்களும், உலகங்களும் அங்குள்ள உயிர்களும் பல்வேறுபட்ட அளவில் அதிர்ந்து கொண்டேயிருக்கும்.

நம் மனம், வேறு ஒருவரின் மனதோடு தொடர்பு கொள்ள வேண்டுமெனின், நம் மனதின் அதிர்வு அலையும், மற்றவரின் அதிர்வு அலையும் ஒரே அதிர்வெண்ணிக்கை (freguency) உடையதாக இருத்தல் வேண்டும். மனதிற்கு எவ்வளவு சக்தி உள்ளதென்பது, அதன் அதிர்வுகளின் தன்மையில் தங்கியுள்ளது. உயர் அளவான அதிர்வெண் உடைய மனம் உயர் சக்தி கொண்டதாக விளங்கி, அதே போன்ற உயர் நிலை மனங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தும். குறைந்த அதிர்வுகள் கொண்ட மனம் அதற்குத் தகுந்த மனமுடையவர்களோடுதான் தொடர்பு கொள்ளும், மனத்தை உயர் அதிர்வுடையதாக ஆக்குவதற்கே தியானம், யோகம் போன்ற சாதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வித சாதனைகளில் சித்தி பெற்றவர்கள் நினைத்த மாத்திரத்தே பல அற்புதங்களை நிகழ்த்த வல்லவர்களாக இருப்பர்.

நம் உடலிலுள்ள ஒவ்வோர் அணுவும் முக்கியமாக ஏழு வகையான நிறங்களால் உருவாக்கப்பட்டுள்ளதால், ஒரு சில நிறங்கள் குறைவுபடும் போது, அந்த நிறம் சம்பந்தப்பட் நோய் உண்டா

சா. சக்திதாசன்

கின்றது. ஒவ்வொரு நிறத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அதிர்வெண் உண்டு. ஊதா நிறத்திற்கு கூடிய அதிர்வெண்ணும் சிவப்பு நிறத்திற்குக் குறைந்த அதிர்வெண்ணுமுண்டு. நம் உடலிலுள்ள அணுக்களின் நிறங்கள் குறைவு படுவதை அறியக் கூடுமாயின் அதனாலாகும் நோயையும். கண்டுபிடிக்க முடியும், உயர் சக்தியுடன் அதிரும் மனம் உடையவர்கள் இதைச் செய்ய வல்லவர்களாயிருப்பர். எல்லாவகை நிற அலைகளும் மின் காந்த சக்தியை உடையனவாகையால் குறைபாட்டை நிரப்ப வல்ல மின் காந்த சக்தியைச் செலுத்தி நோயைக் குணப்படுத்த உயர் சக்தியுள்ள மனம் உடையவர்களால்தான் முடியும்.

★

# அதிர்வு




# காலத்தை வென்றவன்

"டும் என்ற பெருஞ்சத்தத்தில் குடிசையே ஒரு கணம் அதிர்ந்தது. குப்பி விளக்கு ஒரு கணம் விட்டு... பின் ஒளிர்ந்தது. முற்றத்தில் நின்ற பட்டுப் போன பலா மரத்தின் பெருங் கிளை ஒன்று பலத்த சத்தத்துடன் முறிந்து விழுந்தது. மேலே சலாகைகளிற் பிடித்திருந்த கறையான் படைகள் அதிர்வினால் தரையில் வீழுந்தன. எல்லாம் "கண" இடைவேளையில் நடந்து முடிந்தது."

கந்தையாக் கிழவன் மெல்ல எழுந்தான். குப்பிவிளக்கைத் தன் இடக்கையாற் தூக்கிக் கொண்டு வலது கையால் பொல்லை ஊன்றியபடி வாசலுக்கு வந்தான். வடக்குத்திசை நோக்கி அவன் கண்கள் எதையோ ஆராய்ந்தன... வெறித்த பார்வை அவன் பார்வை கூர்மையானது தான்.

''எங்கையோ பக்கத்திலை தான் விழுந்து வெடிச்சிருக்குது'' அவன் வாய் முணுமுணுத்தது. அவனுக்கு எல்லாம் தெரியும். அந்தக் குடிசையிலிருந்து அரை மைல் தூரத்தில் அவர்கள் காத்து நிற்கின்றார்கள். சந்தர்ப்பத்தைப்பார்த்துக் கொண்டு... இரத்த வெறியோடு... மனித வேட்டைக்காக...

மங்கிய வெளிச்சத்தில் அவனுடைய அன்புக்குரிய சிவன் கிடப்பது தெரிந்தது. வாசலில் இருந்து

இ. ஜெயக்குமார்

சில அடிகள் தூரத்தில்... அவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து கொண்டது போல ஒரு கணம் வாலை ஆட்ட முயற்சித்தது. வால் நிலத்துடன் தேய்ந்தபடி சில தடவைகள் ஆடி ஓய்ந்தது....

அந்த நாயும் அவனைப் போலத் தான் கிழடாகி விட்டது. உணவு போட்ட எசமானர்களால் அநாத ரவாகக் கைவிடப்பட்டு... அவனுடன் வந்து ஒட்டிக் கொண்டது. போதிய சாப்பாடு கிடைக்காததால் அதன் வயிறு ஒட்டிப்போய்க் கிடந்தது. உடம்பெல்லாம் புண்கள். சில இடங்களில்ச் சதைகள் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தன. இப்பொழுதெல்லாம் வேறு நாய்களுக்கு அது "இரை" போலவே தென்படுகின்றது அதனால் தான் ...

"நல்ல வேளை. மரக் கொப்பு அதுக்கு மேலை விழயில்லை தப்பி விட்டுது" – கந்தையாக்கிழவன் நிம்மதிப் பெருமூச்சுடன் உள்ளே திரும்பினான். கிழிந்து போய்க் கிடந்த தன் பாயிலே அமர்ந்து கொண்டான். பொல்லும் விளக்கும் தலையணைக்குப் பக்கத்தில் ஒதுங்கிக் கொண்டன.

ஒரு கணம் படுப்போமா என்று சிந்தித்தவன் "வேண்டாம்" என்று கூறிக் கொண்டான். நித்திரை அவனைத் தழுவிக் கொள்ள மறுத்தது. கொஞ்ச நேரம் அப்படியே கைகளைப் பின்னால் ஊன்றியபடி இருந்தான். அவன் முன் நிழற் படங்கள் போல் அவர்கள் வந்து போனார்கள் பார்வதி தோன்றினாள், அப்போது பார்த்தது போல்... பத்து வருசத்துக்கு முன்னால் அவள் அவனை விட்டு – அவர்களை விட்டு – இந்த உலகத்தை விட்டுப் போன போதே அவன் பாதி இறந்து விட்டான். அவனோடு அவள் நாற்பது வருசம் குடும்பம் நடத்தியிருக்கிறாள். சங்கிலித் தொடர் போன்ற அடும் பச் சண்டையளுக்கு மத்தியிலும் அவனோடு ஒன்றி – கஷ்டத்திலும் நஷ்டத்திலும் – இன்பத்திலும் துன்பத்திலும் – வாழ்விலும் தாழ்விலும் இணைபிரியாது பிரிந்து போய் விட்டாளே ....

வெறுமை மண்டிக் கிடந்தது எங்கும் சூனியமாகவே தெரிந்தது. கந்தையாக்கிழவன் முகட்டைப் பார்த்தான். கூரை முழுவதும் கறையான் பிடித்து சலாகைகள் உக்கிப் போய்க் கிடந்தன. எந்தக் கணத்திலும் தலையில் விழலாம். சுவர்களைப் பார்த்தான். எங்கும் வெடிப்புகள். தலையணைக்குப் பக்கத்தில் இருந்த தன் துப்பல்ச் சிரட்டையை எடுத்தான். சிரட்டை தன்னைக் கொஞ்சம் நிரப்பிக் கொண்டது.

அவனுடைய அந்தக் குடிசைக்கு அருகில் வேறு எவரும் வசிக்கவில்லை அந்தக் கிராமத்திலிருந்தே பெருந் தொகையான மக்கள் வேறு கிராமங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுவிட்டார்கள். இருக்கின்ற சிலர் கூடக் கிராமத்தின் எல்லையில்த்தான் தப்புவதற்குத் தயாராக – உஷார் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவன் மட்டும் இன்று – நேற்றல்ல நாலு வருசங்

களாக இந்தக் குடிசையில்த் தான், தனிக்கட்டையாக மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்றும் ஆரும் இல்லாத அநாதையாக ...

"உந்தக் கிழவனுக்குச் சரியான கெறுக்கு. அதுகளோடை போய்ச் சந்தோசமாய் இருக்கேலாமல் இஞ்சை கிடந்து.... உவருக்கு நல்லாய் வயிறு காய வேணும் அப்பதான் புத்தி வரும்" -பலரது அபிப்பிராயமும் இப்படித்தான். மூத்தவள் கனகம் இந்த நாலு வருசததுக்கை நாலைஞ்சு தரம் தான் அப்புவைப் பார்க்க வந்த வள். அந்தச் சந்தர்ப்பங்களிற் கூடத் தன் பேரப்பிள்ளைகளைப் பார்க்கக கிழவன் கொடுத்து வைக் கவில்லை.

"அதுகளை நான் கூட்டி வர வில்லையணை அப்பு. உனக்குத் தெரியும்தானே. இஞ்சை என்ன நடக்கு மெண்டு ஆரும் சொல் லேலாது. அதுக்கை இதுகளையும் கொண்டு ஓட ஏலுமோ"

கிழவன் பதில் எதுவும் சொல்ல மாட்டான். பேசாமல் அவள் சொல்லுவதைக் கேட்டபடி புகை யிலைத் துண்டைச் சப்பிக் கொண் டிருப்பான். அவள் சொல்லி முடிக் கும் போது அவனிடமிருந்து புன் னகை மலரும். காவி படிந்த பற்கள் தெரியும்.

"ஏன்ணை இஞ்சை கிடந்து காயு றாய். என்னோடை வந்து மானிப் பாயிலை இருக்கலாம் தானே. மாளிகை மாதிரி வீடு. அதுகளும் அப்புவைப் பார்கக வேணுமெண்டு ஆசைப் படுகுதுகள்" ... கிழவன் வெகுண்டெழுவான்.

"பிள்ளை விசர்க்கதை கதைக்கிறாய் நான் சின்னப் பெடியனாய் விளையாடிக் கொண்டு திரிஞ்சது நானும் கொம்மாவும் நாற்பது வருச மாய்க் குடும்பம் நடத்தினது... தோட்டம் செய்து காசு சேர்த்து உங்களைக் கரை சேர்த்தது".... எல்லாம் இந்த மண்ணிலதான் இதை விட் டிட்டு ஒரு நாளும் வர மாட் டேன்" அவள் போனவள் தான்.

அடுத்தவள் – பவளம் – வந்தாள். உரும்பிராயிலை தன்னோடை வந்து இருக்கச் சொல்லி அவளு டைய பல தடவைகள் இரந்து கேட் டாள். கிழவன் கெறுக்குப் பிடித் தவன் போல ... அதே பதில்...... உறுதி...... மூர்க்கம் ... அவளும் போய்விட்டாள்.

கடைக்குட்டி ராணி வந்தாள். அவளுக்கு அவனில்ப் பிரியம் அதி கம். அவனுக்கும் தான். அவனு டைய சொததிலே கூடப் பெரும் பகுதியை மூதத பெண்கள் பிடுங் கிச் சென்று விட்டார்கள். ராணிக் குக் கிடைத்தது சொற்பம் தான்

அதனாற் கூட அவனுக்கு அவளில் அனுதாபம் ஏற்பட்டிருக்கலாம். அவள் தான் அவனிடம் அடிக்கடி ஓடிவருகின்றாள். ''இஞ்ச ஒரு நோய் நொடி வந்தாலும் ஆர் பாக்கிறது என்னோட நீர்வேலி யிலை வந்து இருக்கலாம் தானே'' கிழவன் அவளை வாஞ்சையோடு பார்ப்பான் அவளின் தலையை வருடுவான். அவனிடமிருந்து பதில் மட்டும் அவளிற்குக் கிடைக்காது. என்றாலும் அவள் தொடர்ந்து வருகின்றாள். கிழவன் பேரப் பிள்ளைகளுடன் ஆசை தீரக் கொஞ்சி மகிழுகின்றான். வழமை யான கஞ்சிச் சோறைச் சாப்பிட்டு அலுத்துப் போன வாய்க்கு அவள் கொண்டு வருகிற சுவையான சாப் பாடுகள் சுகம் தருகின்றன.

மீண்டும் ஒரு செல் பக்கத்தில் எங்கேயோ விழுந்து வெடித்தது. கிழவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். ''நடுச்சாம நேரம் இன்னும் கொஞ்ச நேரத்திலை விடிஞ்சிடும் ஆனால் அதுக்கிடையிலை'' .. 'பட' 'பட' வென வெடிச்சத் தங்கள் எழுந்தன. கிழவன் காது களைக் கூர்மையாக்கினான். துப் பாக்கிச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன. கடந்த நாலு வருசங்களாக அவன் அனு பவிக்கும் இந்த வாழ்க்கையில் எத்தினையோ தடவைகள் அவன் இப்படிப் பட்ட சத்தங்களுடன் வாழ்ந்திருக்கின்றான். ஆனால் .. இன்று மட்டும் ஒரு வித பரபரப்பு மனம் நிலை கொள்ளாமல் தவித்தது ஏன்? .. ஏன்?...? அவனுக்கே புரி யாமல்... புரிந்தது. துப்பாக்கிச் சன்னங்கள் தன்னை உரசிக் கொண்டு காற்றைக் கிழித்துச் செல்வது போன்ற உணர்வு.

மோதல் நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. அந்த மோதலில் வெற்றி தோல்வியுடன் அவ னுடைய உயிரும் தொங்கிக் கொண்டிருந்தது. விடி வெள்ளி முளைத்து விட்டது. வேட்டுச் சத்தங்கள் இன்னும் அருகாகவே இப்போது கேட்டன. அவனைப் பலர் சூழ்ந்து கொண்டது போன்ற உணர்வு அவன் எழும்பினான். பொல்லை ஊன்றிக் கொண்டு குப்பி விளக்குடன் வாசலடிக்கு வந்தான். வாசலடியில் வடக்கு நோக்கிக் கண்களின் அரைப்பகுதி திறந்த படி... அது தியானம் செய்கிறது போலும் கிழவன் நிம் மதிப் பெருமூச்சு விட்டான். இரவு முழுவதும் தூக்கமின்மையால் அவ னுடைய கண்கள் சிவந்து போய்க் கிடந்தன. உடல் தளர்ச்சியாகவும் சோர்வாகவும் இருந்தது.

''இண்டைக்கு ஏதோ நடக்கப் போகிறது''

கிழவன் இன்றைக்குத் தான் அச்சத்தின் சாயல்களை உணருகின் றான். எல்லாம் அவன் எதிர் பார்த்தது தான். என்றாலும்... ஆபத்து நெருங்கிக் கொண்டிருந் தது. எங்கேயாவது போய் விட வேணும். எங்கே போவது? இதயம்

விரைவாக அடித்துக் கொண்டது. உடலினுள் இரத்தம் கொந்தளித்துப் பாய்வது போல் இருந்தது. முற்றத்திற்கு வந்தான். கால்கள் ஒன்றோடொன்று பின்ன ...

அவன் விரைந்து நடக்கத் திரும்பிய வேளையில்... விர் என்ற சத்தத்துடன் - கிழவன் வயிற்றைப் பிடித்தபடி கீழே சாய்ந்தான். கைகளிலிருந்து பொல்லு விலகியது. புழுதியிலே புரண்டான். இரத்தம் கசியத் தொடங்கிவிட்டது. அவன் துடிப்புகள் மெல்ல மெல்ல அடங்கி...

அந்த நாய் அடிக்கொருதடவை நாக்கினால் நக்கியபடி இன்னமும் அவனைச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அதற்கும் ஏதோ புரிந்துவிட்டது போல... அவன் கிடந்தான்... காலத்தை வென்றவனாக அதுவும் தான்.

---



# சிந்தனைச்சொல் அகராதி

கண்: கங்கையின் ஊற்று

காது: காற்றின் வேலி

மூக்கு: பொடி மெல்லும் துளை

வாய்: கொட்டாவியின் குகை

மெய்: பொய்யின் புதுவடிவம்

கால்: உடம்பின் ஊன்றுகோல்

கை: மனிதனின் நம்பிக்கை

நெஞ்சு: ஒரு வகைப் பஞ்சு

வயிறு: சக்தித் தொழிற்சாலை

இடை: ஒருவகைக் கொடி

தாடி: தளர்வின் குறிகாட்டி

தலைமுடி: மீசையின் சோதரன்

தொடை: இறைவனின் கொடை

-சாம்ராஜ்

இளையவர்களே!

இது உங்கள் பக்கம்

## வளர்பிறை

## புன்னகை

உன் பூவிதழ்
விரிந்து உதிர்வதேன் - என்
காதலுக்கு
அஞ்சலியா?

— யாதுஜூராஸ்

## தியாகி

இறக்கும்
போதுதான்
இவன்
பிறக்கின்றான்.

## ஆசை

நான்
வளர்ந்து
கொண்டிருக்கின்றேன்;
உலகம்
தேய்ந்து
கொண்டிருக்கிறது.

## அராஜகம்

எங்கும்
இன்று
இதனின் ஆட்சி,
இதனால்
புவியில்
தினம் பிணக்காட்சி

— கருணை நேசன்

## பெண் மனம்

பெண்ணே?
உன் மனம்
எப்பொழுதும்
சுத்தமாக இருக்குமாமே!
ஓ.... அதை நீ
அடிக்கடி
மாற்றிக் கொள்வதனால்த்
தானோ!

— சியாமணாளன்

## உயிரே!

பாடையில் போகுமுன்னே
பார்க்க வருவாயோ — அன்றி
பார்வையில் ஓர் ஆயிரம் ஜீவனைப்
பதறடிப்பாயோ இன்னும்.



கட்டுரை

# கல்வியும் காசும்

● ம. ஜெயராமசர்மா

"சட்டம் இல்லாததை இருக்கிறது என்கிறது. இருப்பதை இல்லாதது என்கிறது. குற்றவாளியை நிரபராதியாக்குகிறது. குற்றமற்றவனைக் குற்றவாளியாக்குகிறது.

கொலை செய்தவன், கற்பழித்தவன், கொள்ளையடித்தவன், லஞ்சம் வாங்கியவன் வெளியே பெரும்புள்ளியாக உலவுகிறான்''

கற்கும் பேறு பெற்றவன் மனிதன். அதேவேளை பலவகைகளால் காசு சேர்க்கும் இயல்பும் உடையவன் மனிதன். கல்வி முக்கியமா? அல்லது காசு முக்கியமா? என்ற வினா எழும் பொழுது ஒட்டு மொத்தமாக மனிதன் காசின் பக்கமே தலை சாய்த்து விடுவதைக் காண்கின்றோம். கல்வி கற்றவர் கூடக் காசினையே பெரிதாக மதிப்பதையும் - அதன் வயப்பட்டு நிற்பதையுமே காண்கின்றோம். இது பொருத்தமானதா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கண்ணுடையர் என்போர் கற்றோர், பிச்சை புகினும் கற்கை நன்றே, கேடில் விழிச்செல்வம் கல்வி, ஒருமைக்கட் தான் கற்ற கல்வி ஒருவருக்கு எழுமைக்கும் ஏமாப்பு உடைத்து, கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன். குஞ்சி அழகு, கொடுந்தானை கோட்டழகு - மஞ்சள் அழகு அழகல்ல என்றும் கல்வி அழகே அழகு என்றும் சொல்லப்படுகிறது இவையெல்லாம் கல்வியின் உயர்வையும் - கல்வியானது மனிதனுக்கும் அவன் வாழ்வுக்கும் எந்த அளவுக்கு இன்றியமையாதது என்பதையும் காட்டி நிற்கின்றன.

ஒருதாய் தனது பிள்ளையைச் சான்றோன் எனக் கேட்ட பொழுதில்தான்- பெற்ற நிலையினும் ஏற்பட்ட மகிழ்ச்சியை விடக் கூடுதலான மகிழ்ச்சியை எய்துவாள் என வள்ளுவம் கூறுகிறது. தாயின் நிலை இப்படி என்றால் தந்தையின் நிலையும் அதையொட்டியே அமைகிறது. கற்றவரது அவையின் கண் தன் பிள்ளையை அமரச் செய்வது தான் ஒரு தந்தையின் கடன் என்பதும் வள்ளுவத்தின் நிலையாகும்.

அரசன் பல விதத்திலும் செல்வாக்கு மிக்கவன். அவன் நினைத்தால் எதையுமே செய்து விடலாம். ஆனால் அந்த அரசன் கூட கல்வி அறிவு மிக்கவனிலும் குறைவானவன் என்பது முன்னோர் மொழியாகும்.

''அரசர்க்குத் தன்தேசமல்லாற் சிறப்பில்லை- கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'' என்பது இருவரது நிலையினையும் காட்டி நிற்கிறது.

கல்வியின் நோக்கம் பற்றிப்பல அறிஞர்கள் பல விதங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். கல்வி ஆன்மீகத்தை வளர்ப்பது ஆளுமையை

## திரிபு - மாறவேண்டும்

ஓர் ஊர் அல்லது நகரத்தின் பெயரை ஆங்கிலத்தில் எழுதும் போது பெயரின் தமிழ் வடிவம் எவ்வாறு உச்சரிக்கப்படுகிறதோ அவ்வாறே ஆங்கிலத்திலும் பொதுவாக எழுதப்படுகிறது. (உ - ம்): கல்முனை - Kalmunai, தெல்லிப்பழை - Tellipalai. ஆனால் சில ஊர் அல்லது நகரத்தின் பெயர்கள் ஆங்கிலத்தில் முற்றிலும் வேறான ஒரு வடிவத்தில் அமைந்துள்ளன. (உ - ம்) யாழ்ப்பாணம் - Jaffna பருத்தித்துறை - Point Pedro இப்பெயர்கள் ஆங்கில ஆட்சியின் பின்பு வந்து இலங்கையின் சரித்திர பூர்வமான ஆவணங்களில் பதியச் செய்யப்பட்டு விட்டன. ஆங்கில ஆட்சி முடிந்து சுமார் 46 ஆண்டுகளாகியும் நாம் இன்றும் ஆங்கிலேயர் வழங்கிய திரிபுபடுத்தப்பட்ட பெயர்களையே பெருமையுடன் கூறிக் கொண்டு திரிகின்றோம். நாம் எமது நகரங்களின் செந்தமிழ்ப் பெயர்களை உச்சரிப்பு மாறாமல் ஆங்கிலத்தில் எழுதி, பேசி வரத் தொடங்க வேண்டும். அப்போது தான் பெயர்களில் பொதித்துள்ள அர்த்தத்தைப் பேணி எங்கும் அறியத் தரமுடியும். யாழ்ப்பாணம் - Yazhpanam எனவும், பருத்தித்துறை - Paruthithurai எனவும் எழுதலாம். அர்த்தமற்ற பெயர்களை உபயோகிப்பதை மாற்ற வேண்டும்.

— அக்கரைச்சக்தி

உருவாக்குவது. சமூக இயைபாக்கத்தை ஏற்படுத்துவது. கடவுளை அறியச் செய்வது என்றெல்லாம் கூறியுள்ளனர். இவற்றை நோக்குகையில் கல்வியின் நோக்கம் சாதாரணமானதல்ல உயரியது ஆகும். ஆனால் அப்படிப்பட்ட கல்வித்துறையினதும் அக் கல்வித்துறையைச் சேர்ந்தவர்களதும் இன்றைய நிலை என்ன?

வைத்தியர்களை நோக்கினால் யார் கூடுதலான பணம் கொடுக்கின்றாரோ அவருக்கே உயர்ந்த மருத்துவத்தை அளிக்கின்றனர். யார் செல்வாக்கு உடையவரோ அவருக்கே சலுகை காட்டுகின்றனர். இப்படிச் செய்யும் பொழுது இவர்களது கல்வி - காசுக்கு அடிமையாகி விடுகின்றது. காசுள்ளவன் இவர்களை விலைக்கு வாங்கி விடுவதையே காணமுடிகின்றது.

வைத்தியம் படிப்பது போன்றதே சட்டத்துறையுமாகும். ஒரு சட்ட நிபுணரது சட்டப்படிப்பு என்ன செய்கிறது? இல்லாததை இருக்கிறது என்கிறது. இருப்பதை இல்லாதது என்கிறது. குற்றவாளியை நிரபராதியாக்குகிறது. குற்றமற்றவனைக் குற்றவாளியாக்குகிறது. கொலை செய்தவன், கற்பழித்தவன், கொள்ளையடித்தவன், லஞ்சம் வாங்கியவன், வெளியே பெரும் புள்ளியாக உலவுகிறான்.

சட்டத்துறை வல்லுனரைக்காசு தன்பக்கம் ஆட்கொண்டு விடுகிறது. யார் கூடுதலான காசைக் கொடுக்கின்றாரோ அந்தப் பக்கமே சட்டவல்லுனர் சாய்ந்து விடுவதைக் காண்கின்றோம்.

சட்டத்தரணிகளின் நிலை இப்படி என்றால்- நீதிபதிகளும் கூடத் தமது நிலையினின்றும் தடுமாறிக் காசுக்காகத் தமது கடமையை மறந்து செயற்படுவதையும் காண முடிகிறது. வசதிகள், வாய்ப்புகள் உடையோர் தமது காசுப்பலத்தால் நீதியையே விலைக்கு வாங்கி விடுகின்றனர்.

விஞ்ஞானம் இன்று பெரியஅளவில் வளர்ந்து விட்டது. மேலும வளர்ந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞானிகள் நாளும் பொழுதும் பல வழிகளில் முயன்றபடி இருக்கின்றார்கள். அவர்களது ஆராய்ச்சிக்கு ஏற்பக்கல்வியின் அளவும் விரிவடைந்து கொண்டே போகிறது. ஆனால் அவர்களது கல்வியும் அதன் பயனான ஆராய்ச்சி முடிவுகளும் அழிவுப்பாதையிலே பயன்படுகிறது.

பலவித ஆயுதங்கள் செய்யப்படுகின்றன. விதம் விதமான குண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. கண்டம் விட்டுக்கண்டம் பாயும் ஏவுகணைகள் செய்யப்படுகின்றன. குண்டு வீசுவதற்கென விமானங்கள் செய்யப்படுகின்றன. இவையெல்லாம் ஏன்? காசு...... காசு... ஆராய்ச்சி, அதியுயர்ந்த கல்வி, யாவும் அழிவுக்கு பயன்

படுகின்றன. இவையா கல்வியின் இலக்கு?

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை'' — என வள்ளுவம் சொன்னது உண்மைதான். அதற்குப்பின் கூறுவதையும் நோக்கி விட்டு இதனை நோக்கவேண்டும்.

''அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லையாங்கு'' என்று சொல்வதன் மூலம் பொருளையும் – அதனோடு அருளையும் அருகருகே வைத்தமை வள்ளுவத்தின் உள் நோக்கை உய்த்துணரப்பண்ணுகிறது. பொருள் தேடவேண்டும். ஆனால் அப்பொருள் அருளைப் பெறக்கூடிய விதத்தில் பயன்படவேண்டும். அதற்குப் பொருள் கூட அறவழிகளில் தான் பெறப்படவேண்டும். அநியாமான முறைகளில் பெறப்படுதல் கூடாது.

பொருள் பற்றிக் கூறியவள்ளுவம் அப்பொருள் வந்து – சேரும் விதம் பற்றியும் அது வந்தவழி தெரியாது ஓடிமறையும் விதம் பற்றியும் சொல்லியிருப்பதும் நோக்கத்தக்கது.

''கூத்தாட்டு அவைக்கழாத் தற்றே பெருஞ்செல்வம் போக்கும்

---

## தேசாபிமானி யார்?
### இரண்டாம் சுற்று முடிவுகள்

முதலாமிடம்: திரு. இ. மகேந்திரன், (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூ ீ

இரண்டாமிடம்: கலாநிதி க. கனகராசா

மூன்றாமிடம்: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

இவர்களைத் தெரிவு செய்து பரிசு பெறுவோரும் முதலாம் சுற்றில் பரிசு பெறுவோரும்

- க. தர்மலிங்கம், கட்டப்பிராய்.
  து. வேலரசன், 91, கண்டி வீதி, அரியாலை.
  (பரிசுத் தொகை தலா 250.00
- ம. துஷ்யந்தி, மானிப்பாய். மகளிர் கல்லூரி
  ச. தூயவன், கே. கே. எஸ். வீதி கொக்குவில் மேற்கு
  (பரிசுத் தொகை தலா 150.00
- ப. மகிந்தன், யா/ மத்திய கல்லூரி
  வி. கணநாதன், 128/3, மானிப்பாய் வீதி, யாழ்.
  (பரிசுத் தொகை தலா 100.00

பரிசுத்தொகை மொத்தம்: 1000.00

அதுவிலிந் தற்று '' கூத்தாடும் இடத்தை நோக்கி பலரும்பல வழிகளாலும் வந்து சேருவார்கள். கூத்து முடிந்தபின் யாவரும் கலைந்து விடுவார்கள். அவர்கள் வரும்போது சொல்லிக் கொண்டு வருவதும் இல்லை. போகும்போது சொல்லிக்கொண்டு போவதும் இல்லை. இதனை எடுத்துக்காட்டாகக் கொண்டு செல்வத்தை வள்ளுவம் அழகாகக் காட்டுகிறது. செல்வமானது சொல்லிக்கொண்டு வருவதும் இல்லை சொல்லிக் கொண்டு போவதும் இல்லை. அப்படிப்பட்ட செல்வத்தை உழைக்க எண்ணி உயர்வான கல்வியை இழிவுபடுத்தலாமா?

காசு வாழ்க்கைக்குத் தேவை தான். காசு இல்லாவிட்டால் எவரும் மதிக்கமாட்டார் தான். எனவே தான் ''காசேதான் கடவுள் அப்பா'' என்றும் ''பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்'' என்றும் ''இல்லானை இல்லானும் வேண்டா மற்று ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்'' என்றும் சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல — ''பணம் பாதாளம் மட்டும் பாயும்'' என்றும் கூறுகிறார்கள். இவையெல்லாம் காசின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. கல்வியைக் கற்பதற்குக் கூடக்காசு தான் அவசியம் என்பதும் வெளிப்படை.

இன்று பெரிய பாடசாலைகளில் அனுமதி பெறக் காசு தேவை.



## வாசகர் இதயம்

சித்திரை ஆனி மாற்றம் முகப் போவியம் கருத்தாளம் உள்ளதாக அமைந்தது. மற்றும் மேகதூதனின் சிறுகதை நன்றாக இருந்தது. எனினும் போட்டிகள் இடம்பெறாதது குறைபாடாக இருந்தது.

அ. சண்முகதாஸ், கோப்பாய்.

மு. கு: ''இந்த ஆண்டுக்கான தேசாபிமானி யார்?'' என்ற போட்டியை நீர் காணவில்லை போலும்

எங்கள் சிந்தனைக்கு உகந்த கருத்துக்களை தரும் மாற்றம் தொடர்ந்து வர வாழ்த்துக்கள்.

த. யோகநாசன்,
மடுக்கோவில் மன்னார்.

வாசகர்களே!

இது உங்கள் சஞ்சிகை உங்கள் மனங்கவர் விடயங்களை கருத்துக்களை; ஆக்கங்களை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். உடனே எழுதியனுப்புங்கள். மாற்றம் இரண்டாம் ஆண்டு மலரில் பிரசுரிக்கப்படும்.

ஆ - ர்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற படிக்கக் காசு தேவை. இவை முற்றிலும் உண்மை தான்.

பெரிய அளவில் காசைக் கொட்டி – பெரியபடிப்புக்களைப் படித்துவிட்டு - கொட்டிய காசை எவ்வளவு விரைவாகப் பெறமுடியுமோ அவ்வளவு விரைவாகப் பெற்றுவிடவேண்டும் என்ற அவாவே மேலோங்கி நிற்கிறது. இதனால் கல்வி ஒரு வியாபாரப் பொருளாகி நிற்கிறது கூடிய காசைக் கொட்டி கூடிய படிப்பைப் படித்து - கூடிய காசை உழைப்பதையே இன்று கல்வியின் இலக்காகக்கொள்ளப் படுகிறதோ என்றே எண்ணவேண்டியுள்ளது. இதைப் பார்க்கும்பொழுது கல்வியைவிடக் காசைவைத்திருந்தால் போதும் என்ற எண்ணம் கூடத் தோன்றிவிடுகிறது. எவ்வளவு படித்தாலும் பட்டங்கள் பெற்றிருந்தாலும் - காசு இல்லாவிட்டால் அவரை யாவரும் ஒரு மாதிரிப் பார்ப்பதையே காண்கிறோம். அதுவே இன்றைய நிலையோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

இந்தநிலை மாறவேண்டும். காசு தேவைதான், கல்வியும் தேவை தான். கல்வியை-காசு பெறுவதற்காகவே பயன்படுத்த வேண்டும் என்ற மனப்பாங்கு மாறவேண்டும். கல்வியால் புகழ் வரும். கல்வியால் உயர்வு வரும். கல்வியால் உழைப்பு வரும். உழைப்பால் ஊதியம் வரும். ஊதியம் கட்டாயம் தேவைதான். ஆனால் அதுதான் கல்வியின் உயர் நோக்கு அல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் கல்விமான்கள் பலர், கல்வித்துறையை விட்டு அரசியல்வாதிகளாகி - காசுக்காகத் தமது நிலையினையே இழந்து நிற்பதைக் காணமுடிகிறது. முடிவில் அவரது கல்வியும் மதிப்பிழந்து - காசும் இழந்து - கடைநிலையில் நிற்பதையும் காண முடிகிறது. எனவேதான் வள்ளுவம்

''இருவேறு உலகத்து இயற்கை
திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு''

– என்று இயம்பியது

இதனை மனத்தில் எண்ணிச் செயற்படுவதே உகந்த செயலாகும். ★

---

## மாற்ற விதி

*நாற்றம் எடுக்கும் சமுதாய அமைப்பு விதியினை*
*தேற்றம் என்று கூறி நின்று பேணாமல்*
*சீற்றம் உற்று தவறு பிழை நீக்கி உலக*
*மாற்றம் எங்கும் சமுதாய மாற்ற விதியாக்குவோம்.*

சிவம்பெருமான் அத்பாஞானம்
நந்தகுமார் தமிழ்மகன்

ஒ சுருட்டியாரே! நல்லார் யார்? கெட்டார் யார்?

கி. சுமதி, கொட்டடி
நாக்குப் புரட்டாரே நல்லார்! நெட்டி, குறட்டை, கொட்டாவி விட்டாரே கெட்டார்!

ஒ இஞ்சி இடுப்பு அழகியைக் கண்டிருக்கிறீர்களா?

க. சங்கர், ஆண்டு 7, யா. இ. க
சுண்டங்காய்ப் பயலே என்னடா கேள்வி (கேலி) இது.

ஒ சுருட்டியாரே! இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி யாமே!

த. செல்வி, சுண்டுக்குளி
கவனம் உடைந்து விடப்போகிறது.

ஒ சுருட்டியண்ணா! நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் என்னை வெறுக்கிறாள் ஏசுகிறாள், எல்லோரும் ஒரு 'தலைக்காதல்' என்கிறார்கள்! காதலுக்கு கண்ணில்லை என்கிறார்கள். தலையுண்டா காதலுக்கு? எனது காதல் ஒரு தலைக்காதலா கூறுங்களேன்?

ப. உமாசுதன், சுண்டுக்குளி.
உது ஒரு தலைக்காதலில்லை; (தம்பிமாரைக் கெடுக்கும்) தறுதலைக் காதல்.

ஒ பூச்சாண்டி காட்டும் புருஷர்கள் பற்றி.........

மா. கணேஷ், சங்குவேலி
முள்ளில்லா முருங்கையின் பல்லில்லா வேதாளங்கள்.

ஒ சுருட்டியாரே! முத்துப் பல் என்பது எது?

து. கோணேஸ்வரன், தாவடி
தெத்திப் பல்லல்ல; அது சொத்திப் பல்லல்ல.

ஒ கச்சேரி கேட்கும் ரசிகன் கதிரையில் இருப்பானா? கடைசியில் நிற்பானா?

இ. வடிவேல், கட்டப்பிராய்
கச்சானும் விற்பான்.

## சுருட்டியின் பதில்கள்

ஒ நண்பரே! புத்தக வெளியீட்டுத் தொழில் பிரச்சினையாக உள்ளது என்ன செய்யலாம்?

ச. செவ்வேள், கச்சேரி கிழக்கு
ஆபத்து என்றால் விட்டுவிடும் அல்லது விற்றுவிடும். ★

— வாசர்களே!

சுருட்டியாரிடம் கேள்விகள் கேட்க விரும்பினால் ஒரு தனித்தாளில் கேள்விகளை அனுப்பிவையுங்கள். சுருட்டியார் சுருக்கமான பதிலளிப்பார். பரிசில்களும் உண்டு ஆ-ர்.

## தமிழ்த்தாய் மன்றம் நடாத்தும்
### இந்த ஆண்டுக்கான
# தேசாபிமானி யார்? 94'

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். இன்றைய சூழ்நிலையில் பொது நலனையே கருத்திற்கொண்டு மக்களுக்குப் பணியாற்றுகின்ற மனிதன் யார்? அவர் ஆற்றும் பணி என்ன? போன்ற விபரங்களை அனுப்பி வையுங்கள்.

நடைபெறும் சுற்றுக்களில் அதிகப்படியான ஆதரவுச் சீட்டுக்களைப் பெறுபவர் '1994 ஆம் ஆண்டுக்கான தேசாபிமானி' யாகக் கௌரவிக்கப்படுவார்.

போட்டி விதிகள்.

1. போட்டிகள் ஒவ்வொரு காலாண்டுக்குமாக மூன்று சுற்றுகள் நடைபெறும்.
2. 'மாற்றம்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் படிவங்களே நிரப்பி அனுப்பப்படல் வேண்டும்.
3. ஒவ்வொரு சுற்றிலும் மூன்று வாசகர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ 500.00. பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.
4. படிவங்களை 05 - 11 - 1994 க்கு முன் மாற்றம் பணிமனை, சட்டநாதர் வீதி, நல்லூர் - என்ற புதிய முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
5. சுற்று முடிவுகளும் இறுதி முடிவும் அடுத்த மாற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.
6. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. எந்த விதமான கடிதத் தொடர்புகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

..................................................................................................................

போட்டி இல - 02 ஆதரவுச் சீட்டு - 03

உங்கள் பெயர்: ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

தேசாபிமானின் பெயர்: ..........................................................................................

முகவரி : ..........................................................................................

என்ன காரணங்களுக்காக அவரைத் தேசாபிமானியாகத் தெரிவு செய்கிறீர்கள்? குறைந்தது ஐந்து காரணங்கள் எழுதுங்கள்.

# ஜெயராஜ்

# ? பதில்

அ. சண்முகதாஸ்,
கொ/ இந்துக் கல்லூரி

● இன்று நாம் படிக்கும் இராமாயணம் உண்மையில் நடந்த நிகழ்வா? அல்லது வான்மீகியின் உள்ளத்தில் எழுந்த கற்பனைக் கதையா?

இதற்கு யாரும் உறுதியான பதில்'சொல்லமுடியாது ஒன்று மட்டும் சொல்லலாம், இராமாயணம் என்றும் நடக்க வேண்டியதே.

● 'கன்னித்தமிழ்' என்று தமிழ் மொழியை கூறுகின்றார்கள். இதில் வரும் 'கன்னி' என்ற சொல் குறிப்பது என்ன?

இளமை

சி. சுபா
கோ. கிருஷ்தவக் கல்லூரி

● சுயநலம் என்பது தவறா?

தன்னை உயர்த்த நினைக்கும் வரையில் சுயநலம் தவறில்லை, பிறரை வீழ்த்த நினைக்கின்ற போது சுயநலம் தவறாகிறது.

● நீங்கள் பொருள் வாங்கிப் பேசுவது தமிழ் முறைக்கு பிழையில்லையா?

பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை

– திருவள்ளுவர்

ஏணெஸ்ற் அனெக்ஸ்ரன்,
ஊர்காவற்றுறை


● ஆஸ்திகன் நாஸ்திகனாவது எப்போது? நாஸ்திகன் ஆஸ்திகனாவது எப்போது?

ஆஸ்திகன் நாஸ்திகனாவது முத்தியின் போது, காரணம் கடவுளும் தானும் ஒன்றாகும் நிலை ஏற்படும் பொழுது தானே கடவுள் பிறிதொரு கடவுள் இல்லை என உணர்வதால்.

நாஸ்திகன் ஆஸ்திகனாவது பிரச்சனைகள் அறிவை வெல்லும் போது.

● குடும்பப் பெண்கள் நெற்றியில் குங்குமப் பொட்டு இடுவதற்கும், சில கன்னியர்கள் இப்பொழுது குங்குமத்தால் நெற்றியில் கோடிடுவதற்கும் என்ன வித்தியாசம்?

முதலாவது அடையாளம்
இரண்டாவது அலங்காரம்



## ஆஸ்மா - தொய்வு

இந்நோய் தொய்வு, இளைப்பு முட்டு எனப்பல பெயர்களால் அழைக்கின்றனர். இது ஒரு சுவாசத் தொகுதி தொடர்பான ஒவ்வாமை (Allergy) நோயாகும். விரிவாகச் சென்னால் ஒரு குறிப்பிட்ட பதார்த்தத்திற்கு (சில உணவுகள், மருந்துகள், புகை, தூசு) சில மனிதர்களின் அசாதரணமான விளைவுகளை ஏற்படுகின்றன. (உ + ம் ஒவ்வாமையான உணவை, தக்காளி உண்டவர்களில் தோல் தடித்தல், நமச்சல், வயிற்றோட்டம், வாந்தி ஏற்படல்) இவ்வாறு தொய்வுநோய் ஆனது சுவாசத்தொகுதியின் ஒவ்வாமை வெளிப்பாடே ஆகும்.

### நோயின் அடிப்படை

நாம் மூக்கினூடாக வளியை உள்ளெடுக்கிறோம் (உட்சுவாசம்) இவ் உட்சுவாச வளியானது தொண்டை வாதனாளி வலது, இடது நுரையீரல்களை அடைகின்றது. இங்கு இவை பல மூச்சுச் சிறுகுழாய்களினூடாக சென்று சுவாசச் சிற்றறைகளை அடைகின்றன. இங்கு குருதிக்கும் உட்சுவாச வளிக்கும் இடையே வாயுப் பரிமாற்றம் நிகழ்ந்த பின் வளியானது வெளிச்சுவாசமாக அதே பாதையில் வெளியேறுகின்றன. மீண்டும் மீண்டும் இவ்வாறு நிகழ்வதால் உடலானது தனது உடல் அணுசேபத்திற்கு தேவையான ஒட்சிசனை ($O_2$) உட்சுவாச வளியில் இருந்து பெற்று, அணுசேபத்தில் வெளியேறும் காபனீரோட்சைட் ($CO_2$) ஐ வெளிச்சுவாச மூடாக வெளியேற்றுகிறது.

சாதாரணமாக ஒரு மனிதனின் சுவாசவீதம் ஒரு நிமிடத்திற்கு 15 – 20 தடவைகள் ஆகும். இச்சுவாசவீதமும் சுவாச ஆழமும். உடலின் தேவைக்கேற்ப கூடிக் குறைகிறது. உ + ம் உடல் அப்பியாசத்தின் போது கூடியும் நித்திரையின் போது குறைந்தும் காணப்படுகிறது. இக்கட்டுப்பாட்டை நிகழ்த்துவது மூளையின் சுவாச மையமாகும். இது குருயிதின் ஒட்சிசன் காபனீரொட்சையிட் செறிவுகளை குருதிக்கலன்களில் உள்ள வாங்கிகள் மூலம் பெற்று அதற்

கேற்ப சுவாசவீதம் அழுத்த மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

ஆஸ்மா நோயாளிகளில் மூச்சுக் குழாயின் உள் விட்டமானது குறைகிறது. இதனால் வெளிச்சுவாசத்தின் போது முற்றாக வெளிச் சுவாச வளியை சுவாசச் சிற்றறையில் இருந்து வெளியேற்ற முடியாமலும் இதனால் அடுத்துவரும் உட் சுவாச வளியை முற்றாக உட் செலுத்த முடியாமலும் போகிறது. இதனால் குருதி ஒட்சிசன் செறிவு குறைந்தும் காபனீரோட்சைட் செறிவு கூடியும் காணப்படுகிறது.

இதனால் நோயாளியின் சுவாச வீதம், சுவாசஆழம் என்பன சுவாசமையத்தினால் அதிகரிக்கப்படுகிறது. இதனால் மூச்சவாங்கலும் விரைவான சுவாசச் செயற்பாடும் ஏற்படுகின்றது. இதையே தொய்வு அல்லது ஆஸ்மா என்கிறோம்.

இனி மூச்சுக்குழாய் உள் விட்டம் ஏன் குறைகின்றது என்பதைப் பார்ப்போம். மூச்சுச் சிறுகுழாயின் குறுக்கு வெட்டை நோக்கின் அது உள் இருந்து வெளியாக

- வளி செல்லும் பாதை.
- அகவளி.
- சீதச் சுரப்பிகளை கொண்ட இடைப்படை
- தசைப்படை

என்பன காணப்படும்.

இதில்
- ★ அகவளி தடித்தல்
- ★ அளவுக்கு அதிகமாக சீதச் சுரப்பு அகவளியில்படையாக படிதல்.
- ★ தசைப் படையின் தொடர்ச்சியான சுருக்கம்.

என்பனவே முக்கிய காரணங்களாகும். இதில் நோயாளிக்கு மேற்குறிப்பிட்ட ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளால் தொய்வு ஏற்படலாம். எனவே வைத்தியர் உரிய காரணத்தை கண்டறிந்து அகவளித்தடித்தியை குறைக்கும் அல்லது சீதச்சுரப்பை குறைக்கும் அல்லது தசைப்படையை தளர்வடையச் செய்யும் மருந்துகளை தரத்திற்கு ஏற்ப வழங்குவர்.

## நோயின் அறிகுறிகள்

1) மூச்சு வாங்கல் - (Breathless Ness)

2) வேகமாகசுவாசித்தல், இதயத் துடிப்பு அதிகரித்தல், நெஞ்சு படபடப்பு, வியர்த்தல்

3) நிமிர்ந்த நிலையில் இருப்பர், தோள் மூட்டுக்களை உயர்த்தி வைத்திருப்பர்.

4) நெஞ்சை இறுக்குவது போன்ற உணர்வு காணப்படலாம்.

5) வெளிச்சுவாசத்தின் வீஸ் (Wheeze) என்னும் இளுப்பு ஒலி கேட்கும்.

6) இருமல் இருக்கலாம் இது. சளியுடன் வறட்டு இருமலாகவும் இருக்கலாம்.

நோயின் அறிகுறிகள் நோயின் தரத்திற்கேற்ப வேறுபடும்.

**நோயின் காரணிகள்**

இளம் வயதினரை பாதிக்கும் நோய்க்கு பரம்பரைக்காரணியே முக்கியமானதாக சொல்லப்படுகிறது.

இது தவிர சிலரில் பூஞ்சண, வைரஸ் நோய்களின் தாக்கத்தினாலோ, குளிர்காற்றை, தூசுகள், சில தொழிற்சாலை கழிவுகள், விலங்குகள் பறவைகளின் கழிவுகளை சுவாசிப்பதனாலோ ஏற்படுகிறது. சில ஒவ்வாமை உள்ள உணவை உண்பதனாலே சிலரில் இந்நோய் ஏற்படுகிறது

நோயின்வகைகள்

● அப்பிஸ்ஸோடிக் ஆஸ்மா (EPISODIC ASTHMA)

இவர்களுக்கு திடீரென நோய்வு ஆரம்பமாகும். பொதுவாக குளிர் காலப் பகுதியிலோ, சில உணவுகளை உட்கொண்டாதாலோ, தூசுகளை சுவாசித்ததாலோ ஏற்படுகிறது.

போட்டி ரூ. 100/-

அட்டைப் படத்தை ஒரு தடவை கண்ணூன்றிப் பாருங்கள். நாடியில் கைவிடாதீர்கள். எங்கே உங்கள் கைவண்ணம். கவிதையை விரைவில் அனுப்பி வையுங்கள். பரிசு: ரூ. 100/-

ஆ-ர்.

● குறோனிக் ஆஸ்மா (CHRONIC ASTHMA)

இவர்களில் நோயானது காலம் பூராக காணப்படும். பொதுவாக இரவு, அதிகாலை, குளிர் காலங்களில் கூடுதலாகக் காணப்படும். இவர்கள் மருந்தும் கையுமாக இருப்பர்.

● ஸ்ரேட்ரஸ் அஸ்மாரிக்கஸ் (STATUS ASTHMATICUS)

இதுநோயின் மிக உக்கிரமான வகைத் தாக்கம். திடீரெனவும் உக்கிரமானதாகவும் இருக்கும். உயிர் ஆபத்தை விளைவிக்கக் கூடியது.

இந்நோயாளர்கள் அவர்களிற்கு ஒவ்வாமையான பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும். மருந்துகளை வைத்திய ஆலோசனைப் படி எடுப்பதால் தேவையற்ற அவஸ்த்தைகளைத் தவிர்க்கலாம். ★

''வருமுன் காப்போம் வளமுடன் வாழ்வோம்''

# அறிவியல் மாமா

நீங்கள் கேட்ட சிந்தனையைத் தூண்டும் கேள்விகளுக்கு பலர் சரியான விடைகளை அனுப்பியிருந்தார்கள். மாமா கேட்டபடி உங்களில் பலர் கேள்விகளையும் கேட்டுள்ளார்கள். நீங்களும் கேட்கலாம். அக்கேள்விகளை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.

## சென்ற முறைக்கான விடைகள்

1. **மாமா! நிலக்கரி எவ்வாறு உண்டாகிறது?**

பல லட்சம் வருடங்களுக்கு முன் இயற்கைக் கோளாறுகளால் புதையுண்ட பாரிய மரங்கள் பூமியின் அழுத்தம் காரணமாக நெருக்கப்பட்டு அதன் விளைவாகவே நிலக்கரி தோன்றுகிறது.

2. **கரும் பொந்துகள் (Black Holes) என்றால் என்னமாமா?**

கரும்பொந்துகள் என்பவை செயற்பாடு இழந்த பெரிய நட்சத்திரங்கள் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பாரிய திணிவு காரணமாகவும், ஈர்ப்பு விசை காரணமாகவும், ஒளியைக் கூட உறிஞ்சி வெளிச்செல்ல விடாத வண்ணம் அவற்றிற்குச் சக்தி உண்டாகின்றது. அதனால் இவற்றிலிருந்து ஒளி வெளிவர முடியாதுள்ளது. எனவே கருநிறமானவையாக இவை தோன்றும். கரும் பொந்துகள், அவற்றை அண்மிக்கும் எப்பொருளையும் தன் நோக்கி உள்ளிழுத்து விடும் ஆற்றல் வாய்ந்தவை. இவை வானியலின் அண்மைக் கால கண்டுபிடிப்பாகும்.

3. **ஒளியியல் பற்றி ஆராய்ச்சி செய்த தமிழகத் தமிழ் விஞ்ஞானி யார்? அவர் கண்டு பிடித்த உண்மை எவ்வாறு அழைக்கப்படுகிறது.**

சேர். சி. வி. இராமன்.

இவர் கண்டு பிடித்த ஒளியியல் உண்மை இராமன் விளைவு (Raman Effect) என அழைக்கப்படுகிறது.

4. **''அணுகுண்டின் தந்தை'' எனப் போற்றப்படுபவர் யார்?**

ஒப்பன் ஹெய்மர் என்பவர் (இவர் அறிவியல் மாமேதை பேராசிரியர் ஐன்ஸ்டீனின் மாணவன். இவரது வழிநடத்தலின் கீழ் அமெரிக்காவில் அணுகுண்டு தயாரிக்கப்பட்டு ஜப்பானின் ஹிரோஷிமா நாகசகி பட்டினங்களில் 2 ஆம்

உலகப்போரின் போது அணு குண்டு வீசப்பட்டது.)

5. வளைவான பாதையொன்றில் வேகமாகத் திரும்பும் போது எமது சைக்கிள் வண்டி ஒரு பக்கமாகச் சரிகிறது ஏன்?

இதற்கு மைய விலக்கு (Centrifugal) விசையே காரணமாகும். இது வளைவான பாதையின் வட்ட மையத்திலிருந்து அப்பால் செயற்படுவதால், சைக்கிள், அதிலிருந்து பயணம் செய்பவர் என்பவற்றின் நிறை விசைக்கும், மைய விலக்கு விசைக்குமான விளையுள் விசை (Resultant force) தாக்கும் திசை வழியே சைக்கிள் சரிகிறது. (சைக்கிளினுடைய தளத்திற்கு அது ஒடுகின்ற பாதை செங்குத்தாக இருப்பதாற்தான் அது சறுக்காமல் செல்வது சுலபமாக இருக்கும் என்ற காரணத்தால் வளைந்த பாதைகள் அவற்றின் வட்டமையத்தை நோக்கிய திசையில் சற்றுச் சரிவாக அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.)

6. வெங்காயத்தை உரிக்கும் போது கண்ணில் நீர் வடிவதேன்?

வெங்காயத்தை வெட்டும் போது அல்லது உரிக்கும் போது அதில் காணப்படும் ஆவிப்பறப்புள்ள பதார்த்தமான தயோபுறப்பனோஸ் (Thiopropanal) நீருடன் (கண்ணீர்) சேர்ந்து சல்பூரிக் கமிலத்தை உற்பத்தி செய்கிறது. இது கண்ணில் எரிவை ஏற்படுத்துவதால் கண்ணிலிருந்து நீர் வடிகிறது

---

# இதோ!

## மாற்றம் வாசகருக்கு ஓர் நற்செய்தி

திடுக்கிடும் தகவல்கள், தித்திக்கும் செய்திகள், தீந்தமிழ் மணம் கமழ அழகுற அச்சேறி வருகிறான். 'மாற்றம்' — மூன்றாவது அகளவயில் நடைபோட.....

★ போத்தலோடு தின்கின்ற மனிதர் திக்-விஜயம்.

★ இளைஞரும் ஆளுமை விருத்தியும் — உளவியல்

★ மதமும் மக்களும் — கட்டுரை.

★ இதயத்துக்கு இன்பமூட்டுகின்ற கவிதைகள்.

★ சிறுகதைகள்

புதிய புதிய அம்சங்களோடு இன்னும் சிலவாரங்களில் உங்கள் கரங்களில் தவழும் மாற்றம் இரண்டாம் ஆண்டு மலர்.

**NATHIYA JEWELLERY**

அழகிற்கு
அழகுசெய்யும்



அழகிய தங்கப்பவுண்
நகைகளுக்கு



# நதியா
# நகை மாடம்

2, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.

**உரிமையாளர்:** சண்முகம் இராஜேஸ்வரன்

எத்திசையும் தித்திக்கும் தேன் சிந்தும்

## ஐஸ்கிறீம் வகைகள்

தயாரிப்பதில் முன்னோடிகள்

RATNAM INDUSTRIAL ORGANIZATION

ரியோ

R I O

# ரியோ

*75, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.*